நல்லூர் கிளை நூலகம்,
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    PeoplesDaily    மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 16 [29-03-1993] திங்கட்கிழமை ஓசை 39

## சுற்றுலா பயணிகள் செல்வதை தடுக்க சுவீடனில் இயக்கம்

(ஒஸ்லோ)

சிறிலங்கா. தாய்லாந்து மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டில் குழந்தைகளை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவது அதிகரித்திருப்பதால், அந்நாடுகளுக்குச் சுற்றுலாப் பயணிகள் செல்வதைத் தடை செய்யும் அனைத்துலக இயக்கம் ஒன்றை சுவீடன் ஆரம்பித்துள்ளது. அடுத்த வாரம் சுவீடனில் ஆரம்பிக்கவுள்ள இந்த நாடுதழுவிய இயக்கத்தில், சுவீடன் நாட்டு அபிவிருத்திக் கூட்டுறவு மற்றும் சமூக விவகார அமைச்சர்கள் முக்கியமான பங்கெடுத்துக் கொள்ள உள்ளனர். சுவீடன் நாடு பூராகவும் இந்த இயக்கத்தை முன்னெடுத்து நடத்திய (4ஆம் பக்கம் பார்க்க)

# விமானப் படையை நவீனமயப்படுத்தி தரைப் போரை தீவிரமாக்க அரசு திட்டம்




கடற்படையின் பீரங்கித் தாக்குதலுக்கு பலியாகிய யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட முதலாம் வருட மாணவன் வில்சன் நிக்கலஸின் இறுதி ஊர்வலத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

## உயிர் சேதத்தை குறைக்க புதிய யுக்தி

[கொழும்பு]

சிறிலங்கா விமானப்படைக்கு புதிய விமானங்களையும், உலங்குவானூர்திகளையும் கொள்வனவு செய்து அதனைப் பலப்படுத்துவதோடு, நவீனப்படுத்தவும், அதன் பின்னர் வடக்கில் விமானப்படையின் உதவியுடன் தரைவழிப் போரைத் தீவிரமாக்கவும் சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டு வருவதாகவும், இராணுவ வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

சிறிலங்கா அரசாங்கம் தற்பொழுது விமானப்படையைப் பலப்படுத்துவதில் தீவிர அக்கறை காட்டி வருகின்றது. இரண்டாம்கட்ட ஈழப்போரில் எதிர்பார்த்த வெற்றியை இராணுவம் அடையமுடியாமல் போனதோடு, பல பின்னடைவுகளைச் சந்தித்ததைத் தொடர்ந்தும், கடந்த வருடம் விமானப்படை பலத்த இழப்புக்களைச் சந்தித்ததைத் தொடர்ந்துமே சிறிலங்கா அரசாங்கம் இம்முயற்சிகளைமேற் கொண்டுள்ளது.

இதன்பிரகாரம் சிறிலங்கா நவீன போர் விமானங்களையும், உலங்குவானூர்திகளையும்கொள்வனவுசெய்துள்ளது. இதில் 'புக்காரா', எவ் - 7 ரககுண்டுவீச்சுவிமானங்களும், எம். ஐ-8 ரக உலங்குவானூர்திகளும் அடங்கும். அத்தோடு எவ் - 7 ரக சுப்பசொனிக் போர் விமானங்கள் நான்கு ஏற்கனவே சிறிலங்கா விமானப்படையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு கொண்டுவரப்பட்ட இவ்விமானங்களும் உலங்குவானூர்திகளும் தற் (4ஆம் பக்கம் பார்க்க)

## விளான் ஊடாக முன்னேற படையினர் முயற்சி

### புலிகளின் தாக்குதலால் முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிமேற்கு இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு முன்னேற எடுத்த முயற்சி ஒன்றை விடுதலைப் புலிகள் முறியடித்தனர். வலிமேற்கு விளான் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரே நேற்று முன்தினம் இரவு 7. 30 மணியளவில் தமது நிலைகளிலிருந்து முன்னேறினர்.

இதன்போது விடுதலைப் புலிகள் இம்முன்னேறிய படைகள் மீது தீவிர தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவம் தமது நிலைகளு [04 ஆம் பக்கம் பார்க்க]

## 100 இராணுவ அதிகாரிகள் கொழும்பில் இன்று மாநாடு

(கொழும்பு)

## எத்தனை இழப்பு நேரிடினும்



கடற்படையின் பீரங்கித் தாக்குதலுக்கு பலியாகிய யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட முதலாம் வருட மாணவன் வில்சன் நிக்கலஸின் இறுதி ஊர்வலத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

# எத்தனை இழப்பு நேரிடினும் உரிமைக்காகப் போரிடுவோம்

## துணைவேந்தர் துரைராஜா

நாம் இரண்டாம்தர பிரஜைகளாக வாழச் சம்மதித்தால் இப்படியானமரணங்கள் நடைபெறமாட்டாது நாம் முதல் தர பிரஜைகளாக வாழ போராடுகின்ற போது இது போல மரணங்கள் நிகழத்தான் செய்யும். எனவே நாம் எல்லோரும் ஒன்றிணைந்தால் மட்டுமே இப்படியான மரணங்களை ஒழிக்கலாம் என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் .பேராசிரியர் துரைராஜா தெரிவித்தார்.

கிளாலியில் கடற்படைத் தாக்குதலில் மரணமடைந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் ஞா. வில்சன் நிக்கலஸின் அஞ்சலிக்கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நாம் சுதந்திரத்திற்காக 1958 ஆம் ஆண்டு தொடக்கம் பல இன்னல்களை அனுபவித்து வந்துள்ளோம், 1983 ஆம் ஆண்டிற்கு பின்னர் எமது இழப்புகள் வித்தியாசமான வடிவில் அமைந்துள்ளன.

இந்த இழப்புகளுக்கு முகம் கொடுக்க அஞ்சியே சிலர் எமது பிரதேசங்களை விட்டு வேறு இடங்களில் இரண்டாம்தரப் பிரஜைகளாக வாழ்ந்து வருகின்றனர். நாம் அப்படிவாழத் தயாராக இல்லை. எத்தனை இழப்புக்கள் வந்தாலும் தொடர்ந்து எமது உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச்செல்லவேண்டும் என்றார்.

இவரைத் தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் சிவஞானசுந்தரம்(நந்தி) "தாய் நாட்டையும் தாய் மொழியையும், தாயையும் நேசித்தவர்களுக்கு இப்படியான மரணம் நிகழத்தான் செய்யும். தாய் நாட்டை நேசித்ததால் தான் இந்தமாணவன் இங்கு இருந்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவபீட மாணவனிற்கு நேற்று இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கரையில் ஷெல் தாக்குதலுக்கு கடந்த 24-ம் திகதி மரணமான யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட முதலாம் வருட மாணவன் ஞா. வில்சன் நிக்கலஸின் இறுதிச் சடங்குகள் நேற்று நடைபெற்றன.

இவரது ஆத்ம சாந்திக்கான திருப்பலி பூசை புனித மரியாள் பேராலயத்தில்நடைபெற்றது. இதில் மன்னார் ஆயர் அதி. வண. இராயப்பு யோசப் ஆண்டகை ஒப்புகொடுத்தார். இதனைத் தொடர்ந்து இவரின் பூதவுடல் அஞ்சலிக்காக மருத்துவபீடத்திலும் வைக்கப்பட்டது. மருத்துவபீடம் முழுவதும் கறுப்பு, வெள்ளை கொடிகள் கட்டப்பட்டும், தோரணங்கள் கட்டப்பட்டும் காணப்பட்டன

இதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் மருத்துவ பீட மாணவர் ஒன்றிய உப தலைவர் என். பவானந்தன் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து இவரது பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துவரப்பட்டது. இதில் மாணவ மாணவிகள், பொதுமக்களும் கலந்து கொண்டனர். (நி)

## அன்னை பூபதி உருவப்படம்

தமிழீழமக்களின் விடிவிற்காக 19-03-88 இல் இந்தியப்படைக்கு எதிராக இரண்டு நிபந்தனைகளை முன்வைத்து சாகும்வரை உண்ணா விரதத்தை மேற்கொண்டு 19-04-88 அன்று ஈகச்சாவைத் தழுவிக் கொண்ட தியாகி அன்னை பூபதி அவர்களின் பிரதிமைப் போஸ்ரர் படம் சிறு அன்பளிப்புச் செலுத்துவதன் மூலம் தமிழீழமாவீரர் பணிமனை, யாழ் மாவட்ட மாவீரர் பணிமனையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

## வடக்கில் நடைபெறுவது இனக் கிளர்ச்சி அல்ல

### பி ஸி. இம்புலானா

இலங்கையில் இனப்பிரச்சினை எதுவும் கிடையாது என மத்திய மாகாண ஆளுநர் பி. ஸி. இம்புலான அண்மையில் கொழும்பில் நடைபெற்ற டி. எஸ். சேனநாயக்கா நினைவுக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அப்போது மேடையில் ஜனாதிபதி பிரேமதாஸா உட்பட மற்றும் புல வெளிநாட்டு ராஜதந்திரிகளும் இருந்தனர்.

இலங்கையில் இனபேதம் இல்லை. கொழும்பில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் வாழ்கின்றனர். வடக்கில் நடைபெறும் கிளர்ச்சியை இனபேதம் எனக் கூறமுடியாது என்றும் இம்புலான குறிப்பிட்டார்.

பலப்படுத்துவதில் தீவிர அக்கறை காட்டி வருகின்றது. இரண்டாம்கட்ட ஈழப்போரில் எதிர்பார்த்த வெற்றியை இராணுவம் அடையமுடியாமல் போனதோடு, பல பின்னடைவுகளைச் சந்தித்ததைத் தொடர்ந்தும், கடந்த வருடம் விமானப்படை பலத்த இழப்புக்களைச் சந்தித்ததைத் தொடர்ந்துமே சிறிலங்கா அரசாங்கம் இம்முயற்சிகளைமேற்கொண்டுள்ளது.

இதன்பிரகாரம் சிறிலங்கா நவீன போர் விமானங்களையும், உலங்குவானூர்திகளையும்கொள்வனவுசெய்துள்ளது. இதில் 'புக்காரா', எவ் - 7 ... திகளும் அடங்கும். அத்தோடு எவ் - 7 ரக சுப்பசொனிக் ... னப்படையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. ... உலங்குவானூர்திகளும் தற்

(4ஆம் பக்கம் பார்க்க)

# விளான் ஊடாக முன்னேற படையினர் முயற்சி

## புலிகளின் தாக்குதலால் முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிமேற்கு இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு முன்னேற எடுத்த முயற்சி ஒன்றை விடுதலைப் புலிகள் முறியடித்தனர். வலிமேற்கு விளான் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரே நேற்று முன்தினம் இரவு 7. 30 மணியளவில் தமது நிலைகளிலிருந்து முன்னேறினர்.

இதன்போது விடுதலைப் புலிகள் இம்முன்னேறிய படைகள் மீது தீவிர தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவம் தமது நிலைகளு

[04 ஆம் பக்கம் பார்க்க]

## 100 இராணுவ அதிகாரிகள் கொழும்பில் இன்று மாநாடு

(கொழும்பு)

அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் உட்பட பசுபிக் பிராந்தியத்தில் அக்கறை கொண்டுள்ள நாடுகளின் இருபத்தொன்பதாவது இராணுவ அதிகாரிகள் மாநாடு இன்று காலை கொழும்பில் ஹோட்டல் கில்டனில் ஆரம்பமாகவுள்ளது.

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இம்மாநாட்டில், அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், இந்தியா, அவுஸ்திரேலியா உட்பட முப்பத்திரண்டு நாடுகளைச் சேர்ந்த சுமார் 100 இராணுவ அதிகாரிகள் பங்குபற்றவுள்ளனர். அமெரிக்ககடற்படையின் பசுபிக் பிராந்திய தளபதி

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

## வவுனியா தடைமுகாமில் 300 லொறிகள் தடுப்பு

(வவுனியா)

வடபகுதிக்கு உணவுப் பொருள்களை ஏற்றிவந்த சுமார் 300 லொறிகள் கடந்த மூன்று வாரகாலமாக மதவாச்சியில் தரித்துநிற்கின்றன.

இதுவரைகாலமும் தென்பகுதியில் இருந்து வடபகுதி நோக்கி வரும் லொறிகள் அனைத்தும் ஈரற்பெரியகுளம் சிறிலங்கா இராணுவ தடைமுகாம் பகுதியில் வைத்து சோதனையிடப்பட்டபின்னரே வடக்கேவர அனுமதிக்கப்படுவது வழக்கம்.

ஆனால் சில வாரங்களாக இங்கு செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் பொதுநிறுவனங்களின் லொறிகள் மட்டுமே சோதனையிடப்பட்டபின் வடக்கே வர அனுமதிக்கப்படுகின்றன.

இதனால் தனியார் லொறிகள் அனைத்தும் உணவுப் பொருள்களுடன் அங்கு தரித்து நிற்கின்றன.

## கிளாலிபூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறுமென யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் யோ. தமிழ்க் குமரன் அறிவித்துள்ளார்.

## விமானம் நோட்டம்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் சில இடங்களை சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் கடந்த சில தினங்களாக அடிக்கடி வட்டமிட்டுநோட்டமிட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் மாலை 5. 40 மணியளவில் ஆனையிறவுப் பகுதியில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்த ஒரு குண்டுவீச்சு விமானம் பருத்தித்துறைப் பகுதியை வட்டமிட்டு நோட்டமிட்ட பின்னர் ஆனையிறவு பகுதியை நோக்கி விரைந்தது. [யோ]

## யாழ். ஆயர் விஜயம்

(தென்மராட்சி)

யாழ். மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் தீவுப்பகுதியில் இருந்து சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து கெற்பெலி பண்டிதர் குடியிருப்பில் தங்கியிருக்கும் அகதிகளை நேரில் சென்று பார்வையிட்டார். (86)

## 500 சிங்கள குடும்பங்கள் மட்டக்களப்பில் குடியேற்றம்

மகாவலி 'பி'வலயம் எனப்படும் மட்டக்களப்பு மாவட்டப் பகுதியில் சிறிலங்கா அரசு சிங்களக் குடியேற்றங்களைத் துரிதப்படுத்தி வருகின்றது என தெரியவருகின்றது.

எதிர்வரும் புதன்கிழமைக்கு பின்னர் ஐந்நூறு சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்படவுள்ளன. இவர்களும் குடியேறியதும் மொத்தமாக குடியேறிய சிங்களவரின் எண்ணிக்கை மூவாயிரத்து இருநூறாக உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# பூசா தடுப்பு முகாமில் உண்ணாவிரதம் ஆரம்பம்

(கொழும்பு)

பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் நேற்று முதல் உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்க முன்னரே இவர்களது பெற்றோர்களோ, உறவினர்களோ இவர்களைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. எனினும் நேற்று இவர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பது என்பதில் உறுதியாக இருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

ஒரு மாத காலத்திற்குள் அனைவர் மீதும் வழக்குத் தொடரவேண்டும் அல்லது விடுதலை செய்யவேண்டும். வழக்கு விசாரணைகள் காலதாமதமின்றி நடாத்தி முடிக்கப்படவேண்டும். தாமதமாகும் வழக்கில் சம்பந்தப்படுவோரை பிணையில் விடுவிக்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை முன் வைத்து இவ் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1992ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் சட்டமா அதிபருக்கும், 1993 ஜனவரி மாதம் சட்டத்தரணிகள் சங்கத்திற்கும் பெப்ரவரிமாதம் ஜனாதிபதி, பாது

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

## மட்டக்களப்பு பகுதியில் மேலும் 2 படைமுகாம்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் மேலும் இரு புதிய சிறிலங்கா இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாக இராணுவ தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. மட்டக்களப்பு தொப்பிகலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாகவும் தரவை மற்றும் 9 ஆம் கட்டைப் பகுதிகளிலேயே மேற்படி இரு புதிய முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை தொப்பிகல கடற்கரை ஓரங்களில் சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் கடலில் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# வரி விளம்பரம்

### தவறிவிட்டது

0^0923001 94 இலக்கமுடைய இராசையா இராசமனோகரன், சந்தை ஒழுங்கை, தெல்லிப்பழை என விலாசமிடப்பட்ட குடும்ப அட்டை யாழ். (ரவுண்) நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (4576)

### அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எம்மிடம் றேடியோ, மணிகூடு திருத்தும் வாடிக்கையாளர்கட்கு மூன்று (3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமை சாவகச்சேரி (எலெக்ரோனிக் ஓட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதிலும் கைதேர்ந்தவர்கள்). (சி-6126)

### சத்தியா நகைத் தொழிலகம்

சகல விதமான நகைத் திருத்த வேலைகளும் மற்றும் வெள்ளி, செப்பு, பித்தளை போன்ற ஆபரணங்களுக்கும் (கிளிற்) தங்கம் பூசி உடனுக்குடன் செய்து பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம், 176/5, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-6261)

### கல்வி கருத்தரங்கு

[வடமராட்சி கிழக்கு]

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்கு இன்று நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும்.

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. [36]

UNIVERSITY OF JAFFNA

# இளவாலையில் சிக்கிய 145 பேரின் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

அந்தோனிப்பிள்ளை ஜோசபின் (56), இன்னாசிமுத்து சுந்தரராஜா (41), சுந்தரராஜா அரசகுமாரி (35). சுந்தரராஜா பிரதீப் (7), பஸ்தியாம்பிள்ளை சூசைப்பிள்ளை (72), நவரட்ணம் ராசமலர் (37), நவரட்ணம் கிறிஸ்ரி உஷாத் (7), ஜோசப் இளையம்மா (63), பிரான்சிஸ் நேசம்மா (76), பிரான்சிஸ் மேரிப்பிள்ளை (51), பிரான்சிஸ் ரோஸ்மேரி (41), சேதுராஜா குணரட்ணம் (40) குணரட்ணம் புஷ்பராணி (36) சுவர்ணமுத்து மரியதாஸ் (45) நடராஜா பத்மநாதன் (36), சிதம்பரநாதன் ரகுராஜ் (12), தம்முலு சண்முகம் (63), தம்முலு சின்னக்கண்டு (67), சின்னக்கண்டு செல்லம்மா (55), கே. சின்னத்தம்பி (50), கென்றி தேவசகாயம் (42), தேவசகாயம் றெஜின்ஸ் (40), கென்றி ஞானப்பு (76), சூசைப்பிள்ளை அன்னம்மா [76], ஆர். தேவராஜா [13]. இமானுவல் றெஜின்ஸ் [56], வேலு கதிரேசு [76], சின்னத்தம்பி காசிப்பிள்ளை [70], காசிப்பிள்ளை அன்னப்பிள்ளை [60].

முருகேசு ஈஸ்வரி [40], முருகேசு ரஜினி [4], முருகேசு கோகுலன் [3], பிலிப் கைதம்பிள்ளை [57], வாலதி பவிலு [50], கஸ்பர் ஆசீர்வாதம் [56], கஸ்பர் ஜெனிலிங்கோ [30]. சவரிமுத்து பெர்னாண்டோ [35], ஜோசப் புலேந்திரன் [48], வன்னியன் கதிரன் [67] ராசையா மாட்டின் [55]. எஸ். முருகன் [65], பேதுரு அந்தோனி [68]. எம். சூசை [68], சூசை சேவதி [45], ரி. நாகமுத்து [63], பூதன் செனன் [76], பிலிப் மரியநாயகம் [41] எஸ். பெர்னாந்து [70], எஸ். சந்தியா [60]. பி. மார்கிரட் [56], பிலிப் பர்னாந்து [70], சூசை அந்தோனிப்பிள்ளை [63], ஜி சூசை [67], மைக்கல் நியகலன் [80], நிக்கலன் எலிக்லெத் [78], சூசை அந்தோனிப்பிள்ளை [65], அந்தோனி பெனடிற் [52], பேதுரு சூசனம் [75], பொன்னம்பலம் அய்யாத்துரை [48]. சிசில் ஜேசுரட்ணம் [16], சகோதரர் மார்ட்டின் [72], வண. ஜேசுதாஸ் [38], ராஜநாயகம் விமல் [14], வண. பீட்டர் [32].

பாஸ்கரன் பிறேமன் [14], ஆறுமுகம் கணபதிப்பிள்ளை [56], அந்தோனிப்பிள்ளை சூசனம் [78] சவரிமுத்து பசிலம்பிள்ளை [74], சுவாமிப்பிள்ளை சூசைப்பிள்ளை [80], எம். பிலிப்பா ராச்சி [65], எம் ரோசம்மா சரோஜா [5], பிலிப் பிரான்ஸிஸ் [30], சின்னத்தம்பி பிறைசூடி [68] வில்லியம் செல்வபாக்கியம் [42] நல்லப்பு கதிர்காமத்தம்பி [45], மரியநாயகம் அனஸ் தந்தின் [62], கொன்ஸ்ரன் ரைன் பிலிப் சேனாதிராஜா [62], ஈ தேவசகாயம் [76], சாமலம் பாக்கியம், செருசலா ராஜூ செருசலா ஜேசப், சிங்கராஜ மதலனம், வல்லிபுரம் கந்தையாபிள்ளை மற்றும், வயோதிபர் இல்லத்தைச் சேர்ந்த எம். கிறிஸ்ரின் (66), எஸ். சிவனேசம் (65), என். சிவபாக்கியம் (50). எம். செபஸ்தி (81), ஜி. அந்தோனிப்பிள்ளை (78), எஸ். பெர்னாந்து, ரி. எலியலெத் (76). கே. செல்லம்மா (83), எஸ். சிவசுப்பிரமணியம் (65). அலக்ஸாண்டர் (80). முதலி (70)

(நி. பா)

### பரிசளிப்பு விழா

வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளில் கல்வி பயின்று 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களுக்கும், கடந்த முறை பல்கலைக்கழகம் சென்றமாணவர்களுக்குமான பரிசளிப்பு விழா இன்று நடைபெறும். 36)

### 'துலங்கல்' சஞ்சிகை

யாழ். பல்கலைக் கழக தொழிலாளர் கல்விக் கழகத்தின் மூன்றாம் வருட மாணவர்களினால் ''துலங்கல்'' II சஞ்சிகை எதிர்வரும் புதன் கிழமை பி. ப. 3-00 மணிக்கு யாழ், பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் வெளியீடப்பட உள்ளது.

யாழ். பல்கலைக் கழக தொழிலாளர் கல்விக் கழக தலைவர் திரு. வே. சிவநேசன் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ள வைபவத்தில் சிறப்பு விருந்தினராக தமிழீழ கல்வி மேற்பாட்டுப் பேரவை பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் அவர்கள் கலந்து கொள்ள உள்ளார்.

கருத்துரைகளை யாழ். பல்கலைக் கழக விலங்கியல் துறை தலைவர் பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் அவர்களும் யாழ். பல்கலைக் கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் திரு. மா. சின்னத்தம்பி அவர்களும் ஆற்ற உள்ளார்கள்.

பாரதி இளைஞர் அறிவியற் கழக கலைப் பிரிவினரினால் ''முற்றத்து மல்லிகை'' எனும் சமூக நாடகமும் இடம்பெற உள்ளது. (17)

# காணவில்லை

கௌசல்யா (கவிதா) என்ற 13 வயதுடைய பெண் பிள்ளையை இம்மாதம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் காணவில்லை. இவர் சற்று தோற்றமானவர். பொதுநிறம், தலைமயிர் குறுகியதாகவுள்ளது. எழுதவோ வாசிக்கவோ தெரியாதவர் இவரைப்பற்றிய விபரம் தெரிந்தவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசத்திற்கு தகவல் தரும்படி அன்புடன் கேட்கப்படுகிறீர்கள்

அருள்திரு. வ இராஜ்குமார்
கிறிஸ்தவ இறையியல் கல்லூரி
(கிறிஸ்த சேவ ஆச்சிரமத்திற்கு அருகாமை)
மருதனார்மடம்,
சுன்னாகம்.

(4577)

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## திரு. நாகலிங்கம் கந்தையா

தோற்றம் : 1908 - 01 - 27

மறைவு : 1993 - 02 - 27

இன்று [29 - 03 - 93] அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்

குருசு மதவடி, ஆனைக்கோட்டை (4581) மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நாகம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக.

# கூட்டுறவு சங்கங்கள் பொருள்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப. நோ. கூ. சங்கம் தன் பாவனையாளரிற்கு கடந்த வெள்ளி தொடக்கம் 2ஆவது சுற்று மண்ணெண்ணெய்வழங்குகிறது. அத்துடன் சென்ற வருடத்தின் (1992) ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களிற்கான மாணவர் மதிய உணவு முத்திரைகளிற்கும் அந்தந்தக் கிளைகள் மூலம் பொருள்கள் வழங்கப்படுகிறது. அதில் ஐப்பசி மாதத்திற்கான முத்திரைப் பெறுமதிக்கு சீனியும் (அதன் விலை 1கிலோ27ரூபா75சதம்) கார்த்திகை, மார்கழி மாத முத்திரைப் பெறுமதிக்கு ஒரு கைலண்ட்பால்மாவும் மிகுதி பெறுமதியில் அரைவாசிக்கு பட்டாணிக் கடலையும் மிகுதி அரைவாசிக்கு பயறும் வழங்கப் படுகிறது.

இதேவேளை புங்குடுதீவு — நயினாதீவு பல. நோ கூட்டுறவுச் சங்கம் மார்ச்மாத முதல் இருவார உலர் உணவு, 1992 ஒக்டோபர், நவம்பர். டிசம்பர் ஆகிய மாதங்களுக்கான மாணவர் மதிய உணவு முத்திரை, இரண்டாவது சுற்று மண்ணெய் ஆகியன கடந்த வெள்ளி முதல் புங்குடுதீவு— நயினாதீவு ப. நோ. கூ. சங்க பாவனையாளர்களுக்கு சங்க கிளைகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றது. மேற்படி பொருள்களையும், பெப்ரவரி கடைசி இரு வாரங்களுக்கான உலர் உணவுப் பொருள்களையும் 31-3-1993 ஆம் திகதிக்கிடையில் தவறாது பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இப்பொருள்களை பெற்றுக்கொள்ள வசதியாக கிளைகள் யாவும் சனி, ஞாயிறு தினங்களில் திறந்து பொருள்கள் விநியோகம் செய்யப்படும் எனவும் தெரியவருகின்றது. (88)

காங்கேசன்துறைத் தொகுதி
உணவு விநியோக நிலையக் கூட்டுறவுத்
தொழிலாளர் சங்கம் (வரைவுள்ளது)
ப இ யா. 1656

## கலந்துரையாடல்

மேற்படி சங்கத்தில் நிர்வாகசபை உறுப்பினர்கள் 24-3-93 அன்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களுடன் உரையாடியதற்கமைய, 10-4-93 அன்று சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் அழைத்து, புனரமைப்பு சம்பந்தமாக ஆராய இருப்பதால் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இடம்: யாழ். மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள கூட்டுறவுக் கல்லூரி

காலம்: 10-4-93 (மு. ப. 11 மணி)

கா. மகேந்திரன்
இயக்குனர்.

(4574)




1) ஐந்து வெற்றுப் போத்தல்கள் (ஜாம் அல்லது நெல்லிரசம்) கொடுத்து ரூபா 25 பெறுவதுடன் அதிர்ஷ்டசீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

2) மாத முடிவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

1-ம் பரிசு - சுவர் கடிகாரம்
2-ம் பரிசு – எவர்சில்வர் வீட்டுப் பாவனைப் பொருள்கள்
3-ம் பரிசு – மாணவருக்கான

[வடமராட்சி கிழக்கு]

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்கு இன்று நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும்.

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. [36]


**UNIVERSITY OF JAFFNA**

*TENDER NOTICE*

Tenders are invited from Contractors registered for Civil Engineering Works with University of Jaffna or ICTAD for Repairs/External painting to Arts Complex.

Tender forms can be obtained from Works Engineer University of Jaffna from *1993 03 30-1993 04. 01* on producing receipt from Bursar, University of Jaffna for the payment of the following tender fees.

a) Refundable Rs. *2,000/-*

b) Non - Refundable Rs. *200/-*

Tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than *10.00* am on *1993. 04. 20.*

Tender forms can inspected free of charge at Planning Branch, University of Jaffna during office hours.

Tender Board, University of Jaffna reserves the right to reject any tender.

REGISTRAR,
University of Jaffna.

P.O. BOX 57,
THIRUNELVELY.
JAFFNA. (சி/6251)


னாந்து [70], எஸ். சந்தியா [60]. பி. மார்கிரட் [56], பிலிப் பர்னாந்து [70], சூசை அந்தோனிப்பிள்ளை [63]. ஜி சூசை [67], மைக்கல் நியகலன் [80], நிக்கலன் எலிக்லெத் [78], சூசை அந்தோனிப்பிள்ளை [65], அந்தோனி பெனடிற் [52], பேதுரு சூசனம் [75], பொன்னம்பலம் அய்யாத்துரை [48]. சிசில் ஜேசுரட்ணம் [16], சகோதரர் மார்ட்டின் [72], வண. ஜேசுதாஸ் [38], ராஜநாயகம் விமல் [14], வண. பீட்டர் [32].

பாஸ்கரன் பிறேமன் [14], ஆறுமுகம் கணபதிப்பிள்ளை [56], அந்தோனிப்பிள்ளை சூசனம் [78] சவரிமுத்து பசிலம்பிள்ளை [74], சுவாமிப்பிள்ளை சூசைப்பிள்ளை [80], எம். பிலிப்பாராச்சி [65], எம் ரோசம்மா [75], கஸ்மிர் கிரகரி [65], கிரகரி றெஜினா [60], சூசைப்பிள்ளை திரேசம்மா [65], சூசைப்பிள்ளை ரோசலின் [55] திருச்செல்வம் சிசிலியா [55], திருச்செல்வம் றெஜின்ஸ் [37], அமலப்பு மேரி ஜோசபின் [67], கிருஷ்ணன் ரட்ணம் [60], அரசரட்ணம் மங்களநாயகி [55], அரசரட்ணம் சந்திரகுமாரி [25], அரசரட்ணம் இந்திரகுமாரி [22], அந்தோனிப்பிள்ளை ஜோசப் [30], சந்தியாகோ சூசையப்பு [60].

வேலுப்பிள்ளை சரவணமுத்து [81], சரவணமுத்து பாக்கியலச்சுமி, ச. சிவராஜா [44], சிவராஜா ராதா [40], சிவராஜா தேவதாஸ் [12], சிவராஜா செந்தூரன் [8], சிவராஜா

## விளையாட்டு

நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும், உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று நாவாந்துறை கலைவாணி விளையாட்டு அரங்கிலே பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் நடைபெறவுள்ளது. இன்றைய போட்டிகளில் இறையன்னை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யங்கென்றியன் விளையாட்டுக் கழகமும், மணிப்புரி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென் பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் விளையாடவுள்ளன.

## மத்தியஸ்தர் சலந்துரையாடல்

யாழ் மாவட்டம் பாடசாலைகள் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மத்தியஸ்தர்களாகக் கடமை ஆற்றுபவர்களுக்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 10.00மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

பெற உள்ள வைபவத்தில் சிறப்பு விருந்தினராக தமிழீழ கல்வி மேற்பாட்டுப் பேரவை பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் அவர்கள் கலந்து கொள்ள உள்ளார்.

கருத்துரைகளை யாழ். பல்கலைக் கழக விலங்கியல் துறை தலைவர் பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் அவர்களும் யாழ். பல்கலைக் கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் திரு. மா. சின்னத்தம்பி அவர்களும் ஆற்ற உள்ளார்கள்.

பாரதி இளைஞர் அறிவியற் கழக கலைப் பிரிவினரினால் ''முற்றத்து மல்லிகை'' எனும் சமூக நாடகமும் இடம்பெற உள்ளது. (17)




## திரு. நாகலிங்கம் கந்தையா

தோற்றம் : 1908 - 01 - 27 | மறைவு : 1993 - 02 - 27

இன்று [29 - 03 - 93] அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்

குருசு மதவடி,
ஆனைக்கோட்டை (4581)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



நாகம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக.

## புளியம்பொக்கணை நாகம்பிரான் கோயில் ஆண்டு உற்சவ பங்குனி உத்தர பொங்கல் 05-04-1993

மேற்படி ஆலய ஆண்டு உற்சவ பங்குனி உத்தர பொங்கல் எதிர்வரும் 05-04-1993 திங்கட்கிழமை பகல் முழுவதும், இரவு மறுநாள் 06-04-1993 செவ்வாய்க்கிழமை காலை வரை நடைபெறும். இவ்வருட பொங்கல் கடந்த வருடத்தைப்போல் அன்றி மிகவும் சிறப்பான ஒழுங்குடன் நடாத்தி முடிக்க தீர்மானித்துள்ளதுடன், கிளிநொச்சி தமிழீழ காவல்துறையினரின் பாரிய பாதுகாப்பு ஒழுங்குகளும் விசுவமடு பொறுப்பாளரின் மேற்பார்வையும் நடைபெறும அடியாரின் போக்குவரத்து நலன்கருதி *M.R.S.* போக்குவரத்து சேவையினரின் சகல சேவைகளும் திறம்பெற நடைபெற உள்ளது.

முக்கிய குறிப்பு.

போக்குவரத்து வசதி இன்மையால் வழமைபோல் சாவகச்சேரியில் இருந்து பண்டம் கொண்டுவர முடியாமையினால் பண்டம் எடுக்கும் வைபவம் கோயிலடியிலேயே நடைபெறும்.

I அடியார்கள் தங்கள் நேர்த்திகளையும் திருப்பணிகளையும் ஆலயத்தில் நிறைவேற்றவும் மற்றும் தனியார் எவரும் நிதியோ, பொருள்களோ எந்த இடத்திலும் சேகரிக்க அனுமதிக்கப்படவில்லை.

II ஆலயத்தைச்சூழ உள்ள பகுதிகளில் வியாபாரம் செய்ய விரும்பும் அனைவரும் 02-04-1993 வெள்ளிக்கிழமை நள்ளிரவுக்கு முன் உரிய இடங்களுக்கு உரிய முழுப்பணத்தையும் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும். அதன் பின் எவரின் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

III கிளிநொச்சி, கண்டாவளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கக் கிளையின் நடமாடும் இலவச வைத்திய சேவையும் இடம்பெறும்.

IV கிளிநொச்சி வடக்குப் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் அடியார்களின் செலவீனத்தைக் குறைக்கும் பொருட்டு ஆலய முன்றலில் சிற்றுண்டிச்சாலை மற்றும் கடைகள் அமைக்க உள்ளது.


V வழமை போல் சுவர் ஒட்டி மூலமும், துண்டுப்பிரசுரம் மூலமும் விளம்பரப் படுத்த முடியாமைக்கு வருந்துவதோடு, இவ்விளம்பரத்தை சகல அடியார்களும் ஏற்றுகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி.

செல்வீ G. அன்னமயில் - தலைவர் (உ. அ. அ.)
S.S. சின்னத்தம்பி - செயலாளர்
நா வீரகத்திப்பிள்ளை - பொருளாளர்
ஐங்கரன் - பிரதமபூசகர்.

(சி-6286)






1) ஐந்து வெற்றுப் போத்தல்கள் (ஜாம் அல்லது நெல்லிரசம்) கொடுத்து ரூபா 25 பெறுவதுடன் அதிர்ஷ்டசீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

2) மாத முடிவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

1-ம் பரிசு - சுவர் கடிகாரம்
2-ம் பரிசு – எவர்சில்வர் வீட்டுப் பாவனைப் பொருள்கள்
3-ம் பரிசு – மாணவருக்கான பாடசாலை உபகரணங்கள்

மேலும் 10 ஆறுதல் பரிசுகள்

3) பின்வரும் இடங்களில் அதிர்ஷ்டசீட்டை பெற்றுக் கொள்ளமுடியும்.

1) ரேஸ்லைன் இன்டஸ்ரீஸ் — 14, சீனியர் வீதி, யாழ்ப்பாணம்.
2) அறிவகம் — சாவகச்சேரி.
3) சுபாஸ் பேக்கவுஸ் — நெல்லியடி.
4) சுந்தரம் அன் சன் — சுன்னாகம். (சி-6269)

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.


## நினைவு கூருகின்றோம்...

## 1993-03-29

*1985*ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய

★ முருகப்பன் உலகநாதன் (அக்கரைப்பற்று -அம்பாறை)

*1989*ஆம் ஆண்டு வல்வெட்டித்துறைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

லெப். சதீஸ் (திருநாவுக்கரசு சிறிதரன்-நெடியகாடு-வல்வெட்டித்துறை)

அச்சுவேலிப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

சல்மன் (மூர்த்தி-காதி அபூபக்கர் வீதி-யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-6283)

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

எதுவுமே அறியாதவன்,
எல்லாவற்றிற்கும் துணிவான்.
— சார்லஸ் - எச். ஸ்பர்ஜன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 29-03-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## "விளையாட்டு வினையாகி விடக்கூடாது"

"விளையாட்டு வினையாகி விடக் கூடாது" என ஓர் எச்சரிக்கை வாசகம் தமிழ் மொழியில் பயன்படுத்தப்படுவதுண்டு. ஆனால், வெடிப் பொருள்களுடன் விளையாடுவது என்பது எப்பொழுதும், வினையாகவே முடிந்துவிடுகின்றது. ஏனெனில், வெடிப் பொருள்கள் ஒரு போதும் விளையாட்டுப் பொருள்களாக மாறக் கூடியவை இல்லை.

வடக்கு கிழக்கில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், வெடிப் பொருள்களுடன் விளையாடியயவர்கள், அவற்றை முன் யோசனை எதுவுமின்றிப் பரீட்சித்துப் பார்க்க முற்பட்டவர்கள் எனப் பலர் அவ் வெடிப் பொருள்களுக்கே பலியாகியுள்ளனர். பலர் படுகாயம் அடைந்துள்ளனர். பலர் அங்கவீனர்களும் ஆகியுள்ளனர்.

இந்த வரிசையில், நேற்றுமுன் தினம் மன்னார் மாவட்டத்தில் மருதமடு கிராமத்திலுள்ள பாடசாலைக்கு அருகில் கிடந்த வெடிக்காத செல் ஒன்றை எடுக்க முற்பட்டபோது அது வெடித்ததினால் நான்கு மாணவர்கள் பரிதாபகரமாக மரணமடைய நேரிட்டது. அத்தோடு பதினொரு மாணவர்கள் படுகாயமடையவும் நேரிட்டது.

இதேபோன்ற சம்பவங்கள் பல கடந்த வருடத்திலும், அதற்கு முன்னைய வருடத்திலும் இடம் பெற்றுள்ளன. இதில், சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் என்ற வேறுபாடு இன்றிப் பலர் பாதிக்கப்பட்டும் உள்ளனர். ஆனால், இவை பற்றி ஓரளவேனும் மக்கள் அறிந்திருந்தும் இவ்வாறான துயரச் சம்பவங்கள் இடம் பெற்ற வண்ணமே உள்ளன.

ஆனால், இவ் வெடிவிபத்துக்களைத் தடுக்கும் முகமாக விடுதலைப்புலிகள் கடந்த காலத்தில் பல எச்சரிக்கைகளை விடுத்துள்ளதோடு, சில ஆபத்துக்களில் இருந்தும் மக்களைப் பாதுகாத்தும் உள்ளனர். ஆனால் அவ் எச்சரிக்கைகளையும் மீறி இவ் வெடிவிபத்துக்கள் நடைபெற்றுள்ளதோடு, மக்களுக்குப் பெரும் துயரத்தையும், இன்னல்களையும் கொடுத்தும் உள்ளன.

இதற்கு மக்களின் கவலையீனமும், அக்கறையின்மையும், வெடிப் பொருள்கள் பற்றிய விளக்கமின்மையுமே காரணமாகும். ஆகையினால், இது குறித்து மக்களை எச்சரிக்கை செய்வதோடு அவர்களுக்கு இவ் வெடிப் பொருள்களின் அபாயத்தை

# தமிழ் பிராமி சாசனம் கந்தரோடையில் மீட்பு

(யாழ்ப்பாணம்

தமிழர் வரலாற்று பாரம்பரியம் தொடர்பாக, மூலாதாரங்களை தேடும் பணி ஒன்றின் போது கந்தரோடையில் பிராமிவரிவடிவம்பொறிக்கப்பட்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்ட துண்டுகள் சிலவற்றை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் செ. கிருஷ்ணராசா கண்டெடுத்துள்ளார்.

கறுப்பு - சிவப்பு மட்பாண்ட வகையைச் சேர்ந்த தட்டையான சட்டி ஒன்றின் விளிம்பில்மிகத்தெளிவாகப் பொறிக்கப்பட்டிருந்த சாசன வாசகம் ஒன்று கந்தரோடையில் உள்ள மேட்டு நிலப்பகுதியில் பொது மக்களால் வெட்டப்பட்ட குழி ஒன்றினுள்ளிருந்து மீட்கப்பட்டது.

இதில் 'குணி' என்ற மிகவும் தெளிவாக பிராமி வரி வடிவம் காணப்பட்டது. இது 'பிக்குணி' என்ற தமிழ்ப் பதத்தின் இறுதிபாகமாக கிடைத்துள்ள இச்சாசனம் அமையக் கூடும் என இது தொடர்பாக ஆராய்ந்த பேராசிரியர் கிருஷ்ணராசா தெரிவித்தார்.

இப்பதத்திற்கு உரிய வரி வடிவம் கி. பி. 1ஆம், 2ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ் நாட்டு வரிவடிவ முறையை தழுவியதாக உள்ளது எனக் கூறப்படுகின்றது. இது தொடர்பான ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## பம்பைமடு மக்கள் மீளச் சென்று குடியேறினர்

(வவுனியா)

இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்துசென்ற பம்பைமடு மக்கள் மீளச் சென்று குடியமர்வதை அவதானிக்க முடிகிறது

சமீபத்தில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது அச்சம் காரணமாக வெளியேறிச் சென்ற பல தமிழ்க் குடும்பங்கள் தற்போது மீளக்குடியமர்கின்றன.

பம்பைமடு குடியிருப்பை நாக்கிச் செல்ல முயற்சித்த இராணுவம் தற்போது வவுனியா - மன்னார் வீதியில் உள்ள பம்பைமடு சந்தியில் நிலை கொண்டுள்ளதை அடுத்து இராணுவ அச்சம் குறைந்திருக்கிறது. இதனால் வெளியேறிய மக்கள் மீளக்குடியமர்கின்றனர். (தி)

மாகாணசபைத் தேர்தலில்

## யானைச் சின்னத்தின் கீழ் இ. தொ. கா. போட்டியிடும்

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் மலையகத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் யானைச் சின்னத்தின் கீழ் போட்டியிடும் என கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. ஆளும் ஐ. தே. கவின் தேர்தல் சின்னம் யானை என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறை மாகாணசபை தேர்தலில் மலையகத்தில் ஐ. தே. க. உடன் தொழிலாளர் காங்கிரஸ் இணைந்து போட்டியிட வேண்டுமானால் அதன் சில கோரிக்கைகளை ஆளும் ஐ. தே. க. நிறைவேற்ற வேண்டும் என இ. தொ. கா நிபந்தனை விதித்ததும், இது தொடர்பாக ஆளும் சட்சி பிரதிநிதிகள் இ. தொ. கா உடன் பேச்சு நடத்த கடந்த வாரம் நுவரெலியா பயணமானதும் தெரிந்ததே.

கடந்த தேர்தல்களின்போது மலையகத்தில் ஐக்கிய தேசியக்கட்சியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் இணைந்து பொதுச்சின்னமாக சேவல் சின்னத்தின் கீழ் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## வன்னிப்பகுதிகளில் மண்ணெய் விலை வீழ்ச்சி

(வவுனியா)

வன்னிப் பகுதிகளில் தீப்பெட்டி, மண்ணெய் என்பனவற்றின் விலை திடீர் என்று வீழ்ச்சியடைந்துள்ளன. கடந்த பல மாதங்களாக தீப்பெட்டிக்கு இருந்து வந்த உச்சவிலை வீழ்ச்சியடைந்துள்ளது.

தீப்பெட்டியை வடபகுதிக்கு மொத்தமாக எடுத்துச் செல்ல விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படும் என்று வந்த செய்தியை அடுத்தே இந்த விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

தற்போது இராணுவம் அற்ற பகுதிகளில் ஒருடசின் தீப்பெட்டியின் விலை 25 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதேபோல மண்ணெயின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது. இதன் விலை மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சங்குப்பிட்டி - பூநகரி பாதை வழியாக வாகனங்களில் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவது சாத்தியமாகும் என்ற செய்தியை அடுத்தே இந்த விலை வீழ்ச்சியடைந்துள்ளது. (தி)

## வன்னி பிரதேசத்தில் கிராமசேவகர் பற்றாக்குறை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள கிராமசேவையாளர் வெற்றிடங்களுக்கு புதிய பணியாளர்களை நியமிப்பதற்கு வவுனியா செயலகம் பின்னிற்கிறது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டும் மித மிஞ்சிய பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

நெடுங்கேணி, செட்டிகுளம், வவுனியா தமிழ்ப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் ஏராளமான கிராமசேவையாளர் வெற்றிடங்கள் உள்ளன. இதன் காரணமாக கிராமப்புற மக்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் அலைகின்றனர்.

சமீபத்தில் கிராமசேவையாளர்களுக்குரிய பரீட்சை நடாத்தப்பட்டு பலர் தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும் புதிய நியமனம் எவையும் இடம் பெறவில்லை.

வவுனியா நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டும் பதினொரு கிராமசேவையாளர்களுக்குரிய வெற்றிடங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தி)

## உலர் உணவு விநியோகம் சீனி இடம்பெறவில்லை

தீவக ப. நோ. கூ. சங்கங்களிற்கு யாழ் கச்சேரி புனர்வாழ்வுப் பகுதியினரால் மார்ச் மாத உலர் உணவு விநியோக அளவுத்திட்டம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் மார்ச் மாத உலர்உணவு விநியோகத்தில் சீனி இடம்பெறவில்லை. அத்துடன் பெயர் குறிப்பிடாத பருப்பு இடம் பெற்றிருக்கின்றது. அதே நேரம் அதன் விலை ரூபா65/- எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (88)

## நனவிங்கு நிலவானது

பூவொன்று பொறியானது - பெரும்
புயலோடு போரிட்டது.
பாரத நாடொன்று பகையானது - எம்
படைகண்ணிற் பனி பூத்தது.
நீரின்றி உயிர் வாழ்ந்தது - தமிழ்த்தாய்
கண்ணீர் இங்கு குளமானது.
சாவொன்று முடிவானது - புயல்
சாய்ந்தோய்ந்து சருகானது
போரென்று படை நின்றது - உயிர்
போனாலும் பூவென்றது.
கடல் அலையொன்று நிலையானது - சிறு
கண நேரம் அது நின்றது.
உயிர் நடைபோட்டு விடைபெற்றது - உன்தன்
நனவிங்கு நிலவானது.

-பே. தூயவன்

## நியமனபத்திர தாக்கல் பார்வையிட சார்க் உறுப்பினர்

விரைவில் நடைபெறவுள்ள மாகாணசபை தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்படுவதை சார்க் அமைப்பின் பிரதிநிதிகள் பார்வையிடுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்பொருட்டு சார்க்பிரதிநிதிகள் இவ்வாரம் கொழும்பு வந்து சேர்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### குடிநீர் இல்லை

கைதடி ரயர் தொழிற்சாலையில் உள்ள அகதி முகாமில் குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் அப்பகுதியில் குடிநீரைப் பெற்றுக் கொள்ளுவதற்கு வசதிகள் இன்றி அவதிப்படுவதாக தெரியவருகின்றது. (86)

### 'பலிக்களம்' மேடையேறும்

யாழ். திருமறைக் கலாமன்றம் தவக்கால சிறப்பு நிகழ்ச்சியாக யேசுக் கிறிஸ்துவின் திருப்பாடுகளைச் சித்திரிக்கும் "பலிக்களம்" என்னும் பக்தி இசை உரை நாடகத்தை பிரமாண்டமான முறையில் மேடையேற்ற ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

யாழ். பிரதான வீதி மன்றக் கலையரங்கில் 90 அடிகள் நீளமான பலதளங்களைக் கொண்ட மேடை இதற்கென உருவாக்கப்பட்டுள்ளது [21]

### சைக்கிள்கள் வந்தன

(வடமராட்சி கிழக்கு)

யாழ். மாவட்ட கிராம சேவையாளர்களுக்கு கப்பலில் சைக்கிள்கள் வந்து சேர்ந்துள்ளன.

இவற்றில் 4 சைக்கிள்கள் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளன. (36)

### பிரியாவிடை வைபவம்

புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில், சுமார் 15 வருடகாலம் அதிபராகப்பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற திரு. சி. கணேசமூர்த்தி அவர்களின் சேவையைப்பாராட்டி, பிரியாவிடை வைபவம் அண்மையில் நடைபெற்றது. (30)

# பாதுகாப்புச் செல்வங்களை

# தி.மு.க. பந்தல் தீக்கிரை; அ.தி.மு.க. காரணமல்ல

கடந்த வருடத்திலும், அதற்கு முன்னைய வருடத்திலும் இடம் பெற்றுள்ளன. இதில், சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் என்ற வேறுபாடு இன்றிப் பலர் பாதிக்கப்பட்டும் உள்ளனர். ஆனால், இவை பற்றி ஓரளவேனும் மக்கள் அறிந்திருந்தும் இவ்வாறான துயரச் சம்பவங்கள் இடம் பெற்ற வண்ணமே உள்ளன.

ஆனால், இவ் வெடிவிபத்துக்களைத் தடுக்கும் முகமாக விடுதலைப்புலிகள் கடந்த காலத்தில் பல எச்சரிக்கைகளை விடுத்துள்ளதோடு, சில ஆபத்துக்களில் இருந்தும் மக்களைப் பாதுகாத்தும் உள்ளனர். ஆனால் அவ் எச்சரிக்கைகளையும் மீறி இவ் வெடிவிபத்துக்கள் நடைபெற்றுள்ளதோடு, மக்களுக்குப் பெரும் துயரத்தையும், இன்னல்களையும் கொடுத்தும் உள்ளன.

இதற்கு மக்களின் கவலையீனமும், அக்கறையின்மையும், வெடிப் பொருள்கள் பற்றிய விளக்கமின்மையுமே காரணமாகும். ஆகையினால், இது குறித்து மக்களை எச்சரிக்கை செய்வதோடு அவர்களுக்கு இவ் வெடிப் பொருள்களின் அபாயத்தையும் விளங்க வைப்பதும் அவசியமாகும்.

இனப்படுகொலை நோக்கத்தோடு, சிறிலங்கா அரசாங்கம் நடத்தும் செல் வீச்சு, குண்டுவீச்சு, பீரங்கித்தாக்கு என்பனவற்றால், உடனடியாக மக்கள் இறந்தாலென்ன? காலம் தாழ்த்தி வெடிப் பொருள்களுடன் விளையாடும் போது இறந்தாலென்ன? எல்லாம் சிறிலங்காவைப் பொறுத்து ஒன்றுதான். அரசிற்குத்தேவை தமிழர்கள் கொல்லப்பட வேண்டும் என்பதே ஒழிய எவ்வாறு கொல்லப்பட வேண்டும், எப்பொழுது கொல்லப்பட வேண்டும் என்பதல்ல.

இந்நிலையில், குண்டுவீச்சு, செல் வீச்சு என்பனவற்றின் போது தப்பிப்பிழைத்து, அநாதரவாக கிடக்கும் வெடிப் பொருள்களுடன் விளையாட முற்பட்டு மரணமடைவதோ அன்றி அங்கவீனர்களாவதோ மிகவும் வருந்தத்தக்கதும், கண்டிக்கத்தக்கதும் ஆகும். இந்நிலையில் மக்கள் விழிப்பாக இருத்தல் அவசியம்.

இதேவேளை இன்றைய யுத்தச் சூழலில் வெடிப் பொருள்களின் அபாயம் குறித்து சிறுவர்கள் முதல் பெரியவர்கள்வரை அறிந்திருத்தலும் அவசியமாகும். ஆகையினால், இது குறித்து எம்மிடமுள்ள சகல வழி முறைகளிலும் அவை குறித்து மக்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட வேண்டும். குறிப்பாக பெற்றோர், வெடிப்பொருள்களின் அபாயம் குறித்து பிள்ளைகளுக்கு எச்சரிக்கை செய்வதோடு, அவர்களின் விளையாட்டுப் பொருள்களிலும் அவதானமாக இருக்கவேண்டும்.

அத்தோடு, பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு இவை குறித்த எச்சரிக்கைகளைத் தொடர்ந்து வழங்குவதற்குரிய வாய்ப்புக்களும் உண்டு, இவை தவிர சனசமூக நிலையங்கள் ஊடாகவும், வேறு சமூக சேவை நிறுவனங்கள் மூலமாகவும் இவை குறித்த எச்சரிக்கை மக்களுக்கு விடுக்கப்படுவதோடு, அவர்களுக்கு இவை குறித்த அறிவையும் புகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் எமது இனத்தின் அநாவசியமான மரணங்கள் பலவற்றைத் தடுப்பதோடு, பலரின் துயர்களையும் போக்கலாம். இவை, இன்று பெரும் இன அழிவிற்கு உள்ளாகிவரும் இனத்திற்கு சிறிதளவேனும் பேருதவியாக அமையக் கூடியதொன்று என்பதில் சந்தேகம் ஏதுவுமில்லை.

## மண்ணெய் விலை வீழ்ச்சி

(வவுனியா)

வன்னிப் பகுதிகளில் தீப்பெட்டி, மண்ணெய் என்பனவற்றின் விலை திடீர் என்று வீழ்ச்சியடைந்துள்ளன. கடந்த பல மாதங்களாக தீப்பெட்டிக்கு இருந்து வந்த உச்சவிலை வீழ்ச்சியடைந்துள்ளது.

தீப்பெட்டியை வடபகுதிக்கு மொத்தமாக எடுத்துச் செல்ல விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படும் என்று வந்த செய்தியை அடுத்தே இந்த விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

தற்போது இராணுவம் அற்ற பகுதிகளில் ஒருடசின் தீப்பெட்டியின் விலை 25 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதேபோல மண்ணெயின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது. இதன் விலை மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சங்குப்பிட்டி - பூநகரி பாதை வழியாக வாகனங்களில் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவது சாத்தியமாகும் என்ற செய்தியை அடுத்தே இந்த விலை வீழ்ச்சியடைந்துள்ளது. (தி)

கள உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டும் மித மிஞ்சிய பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

நெடுங்கேணி, செட்டிகுளம், வவுனியா தமிழ்ப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் ஏராளமான கிராமசேவையா[...] பெறவில்லை.

வவுனியா நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டும் பதினொரு கிராமசேவையாளர்களுக்குரிய வெற்றிடங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தி)

## உலர் உணவு விநியோகம் சீனி இடம்பெறவில்லை

தீவக ப. நோ. கூ. சங்கங்களிற்கு யாழ்கச்சேரி புனர்வாழ்வுப் பகுதியினரால் மார்ச் மாத உலர் உணவு விநியோக அளவுத்திட்டம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் மார்ச் மாத உலர்உணவு விநியோகத்தில் சீனி இடம்பெறவில்லை. அத்துடன் பெயர் குறிப்பிடாத பருப்பு இடம் பெற்றிருக்கின்றது. அதே நேரம் அதன் விலை ரூபா65/- எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (88)

சேவையாளர்களுக்கு கப்பலில் சைக்கிள்கள் வந்து சேர்ந்துள்ளன.

இவற்றில் 4 சைக்கிள்கள் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளன. (36)

### பிரியாவிடை வைபவம்

புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில், சுமார் 15 வருடகாலம் அதிபராகப்பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற திரு. சி. கணேசமூர்த்தி அவர்களின் சேவையைப்பாராட்டி, பிரியாவிடை வைபவம் அண்மையில் நடைபெற்றது. (30)

# பாதுகாப்புச் செலவுகளை அமெரிக்கா குறைக்கின்றது

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் அடுத்த ஆண்டிற்கான பட்ஜட்டில் பாதுகாப்பு செலவு பத்தாயிரம் மில்லியன் டொலர்களால் குறைக்கப்படுகின்றது என ஜனாதிபதி பில் கிளின்டன் அறிவித்துள்ளார். கிளின்டன் தனது தேர்தல் வாக்குறுதியில் அடுத்த நான்கு ஆண்டுகளில் சுமார் 90 ஆயிரம் அமெரிக்க டொலர்களால் பாதுகாப்பு செலவை குறைப்பதாக உறுதி அளித்ததன் முதற்கட்ட நடவடிக்கையே இந்த பத்தாயிரம் மில்லியன் டொலர் பாதுகாப்பு 'வெட்டு' எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி புஷ் திட்டமிட்டிருந்த பாதுகாப்புச் செலவையும் விட இது பன்னிரண்டாயிரம் மில்லியன் டொலர் குறைவு எனத் தெரிவிக்கப்படுகின்றது. பரிசீலனைகளின்பின், வரும்ஆண்டுகளில் இந்த செலவு வெட்டு மேலும் அதிகரிக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

இராணுவத்தின் விசேட நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 108 ஆயிரம் மில்லியன் டொலர் வெட்டும், ஐரோப்பாவில் தங்கியுள்ள அமெரிக்கப் படைகளுக்காக ஒதுக்கப்பட்ட செலவு தொகையில் 133 ஆயிரம் மில்லியன் டொலர் வெட்டும் இந்த பாதுகாப்புச் செலவுத்தொகை வெட்டில் அடங்குகின்றன.

அமெரிக்க விமானப்படை தனது 28 போர்விமானப் படையணியில் 4 படையணிகளை இதன்மூலம் கைவிட வேண்டியேற்பட்டுள்ளது. அமெரிக்க கடற்படையில் உள்ள விமானந்தாங்கி கப்பல்களின் தொகை பதினான்கிலிருந்து பன்னிரண்டாக குறைக்கப்படுகின்றது.

இத்தகைய குறைப்புகள் மேற்கொள்ளப்பட்டாலும் இராணுவ நவீனமயப்படுத்தலும், பயிற்சிதரமும் தொடர்ந்து பேணப்படும் என அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் ஆஸ்பின் தெரிவித்தார்.

சோவியத்தின் அச்சுறுத்தல் நீங்கிவிட்ட பின்பும் அமெரிக்கா நான்கு அச்சுறுத்தல்களை எதிர்நோக்குவதாக அவர் தெரிவித்தார்.

பயங்கரவாத நாடுகளிடம் அணுஆயுதங்கள் உள்ளமை, வடகொரியா, லிபியா, ஈரான், ஈராக் போன்ற பிராந்திய அச்சுறுத்தல், முன்னைய சோவியத்தின் குடியரசுகள், மற்றும் அமெரிக்க பொருளாதாரத்திற்குத் தோன்றியுள்ள அச்சுறுத்தல் என்பவையே தற்போது எதிர்நோக்கப்படும் நெருக்கடிகள் என ஆஸ்பின் குறிப்பிட்டார்.

கோவையில் தி.மு.க.

## மாநாட்டு பந்தலில் தீ விசாரணை நடத்த வேண்டும்

- வாழப்பாடி இராமமூர்த்தி

(சென்னை)

கோவையில் தி. மு. கவின் மாநாட்டுப் பந்தலில் தீப்பிடித்து எரிந்தமை தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரித் தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி அறிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன் தினம் சென்னையில் அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறுகையில்; இத்தீவிபத்திற்குச் சதி வேலையே காரணம் என்று தி. மு க. தலைவர் கருணாநிதியும், அதற்கு நேர் விரோதமான முறையில் மாவட்ட காவல்துறை ஆணையாளரும் கூறியிருப்பதால் இது பற்றிய விசாரணை அவசியமாகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

கோவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநாட்டுப் பந்தலில் தீ ஏற்பட்டதிற்கும், தமது கட்சியினருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழகக் கிளையைச் சேர்ந்த வரதராஜுலு கூறியுள்ளார்.

இதேவேளை இச்சம்பவம் பற்றித் தமிழக ஜனதா தளம், பாட்டாளி மக்கள் கட்சி, இடதுசாரிக் கட்சிகள் உட்பட பலரும் கண்டனங்கள் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இது தவிர இச்சம்பவத்திற்கு அ. தி. மு. க. வினரே காரணம் ஆகும் என்று கடந்த வெள்ளி இந்தியப் பாராளுமன்றத்தில் பேசிய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் குப்புசாமி கூறியுள்ளார். அத்துடன் இச்சம்பவத்திற்குத் தி. மு. க வினருக்கிடையிலான உட்பூசலே காரணமாக இருக்கலாம் என்றும் அ. தி. மு.க வினர் தெரிவித்தனர்.

## தி.மு.க. பந்தல் தீக்கிரை; அ.தி.மு.க. காரணமல்ல

– அமைச்சர் சோமசுந்தரம்

(சென்னை)

கோவை தி.மு.க மாநாட்டு பந்தல் தீக்கிரையானதற்கு அ.தி.மு.கவே காரணம் என மு. கருணாநிதியின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது அரசியல் நோக்குடையது என அ.தி.மு.க பொதுச் செயலர் அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் தெரிவித்தார்.

முன்னதாக பந்தலில் தீப்பிடிக்க மின் ஒழுக்கே காரணம் என பொலீஸார் கூறியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். எனினும் இது திட்டமிட்ட சதி என அறியப்பட்டால் அது யாராக இருப்பினும் குற்றவாளிகளுக்கு எதிராக தமிழக அரசு தவறாது கடும் நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ் மரியாதையை காக்க தி. மு. க. பாடுபடுகின்றது

மாநாட்டில் அன்பழகன் உரை

(சென்னை)

"தமிழ் சமுதாயத்தின் சுயமரியாதையைப் பாதுகாக்க திராவிட முன்னேற்ற கழகம் பாடுபடுகின்றது. தி. மு க. சாதி முறையை எதிர்க்கும் இயக்கம். தமிழகத்தில் தீவிர மத அடிப்படைவாத உணர்வுகளை பரப்ப முயற்சிகள் நடைபெறுகின்றது" என தி. மு. க. பொதுச்செயலர் கே. அன்பழகன் கோயம்புத்தூரில் நடைபெறும் தி. மு. க. மாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார்.

மாநாட்டின் இரண்டாம் நாள் ஆரம்ப வைபவத்தில் பேசிய அன்பழகன் தமிழ்நாட்டினுள் மத, சாதி வெறிகளை நுழைய அனுமதிக்க வேண்டாம் என்றும் தமிழகமக்களை கோருவதாக குறிப்பிட்டார்.

## பாரதீய ஜனதாக்கட்சியுடன் அ.தி.மு.க. கூட்டு சேராது

ஜெயலலிதா அறிவிப்பு

(சென்னை)

அனைத்திந்திய அண்ணா தி.மு.க. பாரதீய ஜனதாக் கட்சியுடன் கூட்டு சேராது என்றும் தமிழகத்தில் அக்கட்சி எதிர்வரும் தேர்தல்களில் தனித்தே போட்டியிடும் என்றும் தமிழக முதல்வரும் அ.தி.மு.க பொதுச் செயலாளருமான ஜெயலலிதா தெரிவித்தார்.

சென்னையில் அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில் மேலும் குறிப்பிடுகையில்; அயோத்தி சம்பவங்களுக்கு தானும் பொறுப்பு என்பது போல் எதிர்க்கட்சியினர் பேசி வருவது சரியல்ல என்றும், கோவை மாநாட்டில் அ.தி.மு.க அரசை மதவெறி அரசு என்று தீர்மானம் நிறைவேற்றியது கண்டிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பாரதீய ஜனதாக் கட்சியினர் சிறுபான்மையினர் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில்பேசி வருவதாகவும், மாநிலத்தில் காலூன்றாத கட்சியுடன் தாம் கூட்டுச் சேர்வதில் அர்த்தம் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். காங்கிரஸ் கட்சியின் தோழமையற்ற போக்கினால் தான் கூட்டணி முறிந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்

ஈழநாதம்

# அ. தி. மு. கவுடன் கூட்டு இனிமேல் வேண்டாம்

## தமிழக காங்கிரஸ் ராவிடம் கோரிக்கை

(டில்லி)

அனைத்திந்திய அண்ணா தி. மு. கவுடன் இனிமேலும் காங்கிரஸ் கட்சி நட்புறவு பாராட்டுவதோ, கூட்டணி அமைப்பதோ கூடாது என்று தமிழகத்திலுள்ள இந்திரா காங்கிரஸ் கட்சியினர் கட்சித் தலைவர் பி. வி. நரசிம்மராவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சூரக்குண்டு மாநாட்டின் போது தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி உட்பட மற்றும் சில தலைவர்கள் பிரதமரும் கட்சித் தலைவருமான பி வி. நரசிம்மராவைச் சந்தித்து இது குறித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

அத்துடன் புதுடில்லியில் உள்ள சில காங்கிரஸ்காரர்கள் சமரசவாதிகள் என்று அறிவித்துக்கொண்டு அனைத்திந்திய அ தி.மு கவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

## மதுரையில் இரு இடங்களில் மர்மக் குண்டு வெடிப்புகள்

மதுரைக்கு அருகேயுள்ள மேலூர் தலைமை அஞ்சல் அலுவலகத்தில். நேற்றுமுன் தினமிரவு பத்து முப்பது மணி அளவில் வெடிகுண்டு வெடித்துள்ளது. இக் குண்டு வெடிப்பினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. இரும்புக் குழாய் ஒன்றினுள் வைக்கப்பட்டிருந்த ஜெலட்டின் குச்சிகள் வெடிக்கவைக்கப்பட்டதாக பொலீசார் கூறியுள்ளனர்.

இதேவேளை மதுரை சுந்தரராசன்பட்டி கிராமத்தில் நேற்றுமுன்தினம் இரவு தனியாருக்கு சொந்தமான மோட்டார் பம்புசெட் ஒன்றில் மற்றொரு குண்டு வெடித்தது. இக் குண்டுவெடிப்பினால் இப் பம்புசெட் சேதமடைந்த போதும் எவரும் காயம் அடையவில்லை என்று கூறப்படுகின்றது.

## ஒருவருக்கு ஒரு பதவி பிரதமருக்குப் பொருந்தாது

### காங்கிரஸ் கட்சி முடிவு

(டில்லி)

ஒருவருக்கு ஒரு பதவி என்ற கொள்கை கட்சித் தலைவருக்குப் பொருந்தாது என்று அனைத்து இந்திய இந்திரா காங்கிரஸ் கட்சியின் இரண்டு நாள் மாநாடு முடிவு செய்துள்ளது.

பி. வி. நரசிம்மராவ் தலைமைக்கு மாநாடு ஆதரவு தெரிவித்தது. ஒருவருக்கு ஒருபதவி என்ற கொள்கை கட்சித் தலைவருக்கும், பிரதம மந்திரிக்கும் பொருந்தாது என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அமைச்சர் அர்ஜுன் சிங் தலைமையிலான அதிருப்தியாளரின் 'ஒருவருக்கு ஒரு பதவி என்ற கோரிக்கை' தோல்வி கண்டது.

## ரஷ்ய அரசியல் கொந்தளிப்பு தணிவு

### –கருத்துக் கணிப்பு ஒத்திவைப்பு

இந்த வருடத்தின் நவம்பர் மாதத்தில் ரஷ்யாவில் அதிபர் தேர்தலையும், பாராளுமன்றத் தேர்தலையும் ... ப்புகைவிடப்பட்டுள்ளது. ரஷ்ய அதிபர் பொறிஸ்யெல்ட்சினுக்கும் சபாநாயகர் கஸ்பு...

## மாவீரர் அருளப்பனுக்கு மக்கள் அஞ்சலி

மணலாறில் நேற்றுமுன் தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின்போது வீரச்சாவு அடைந்த வீரவேங்கை அருளப்பன் (மொறிஸ் - வின்சன் ஸ்ரீதாஸ், 1-ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை) என்பவரின் புகழுடல் பருத்தித்துறை பழைய பஸ் நிலைய மைதானத்தில் நேற்றுப்பிற்பகல் 4மணியளவில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் நவிண்டிலில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் புகழுடல் விதைக்கப்பட்டது. இவரது புகழுடலுக்கு மக்கள் மலர் இட்டு அஞ்சலிசெலுத்தினர். (யோ)

## வீரவணக்கக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

மார்ச் மாதத்தில் வீரச்சாவடைந்த தீவகத்தைச் சேர்ந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை இரவு நாவற்குழி லவனிதா குடியிருப்பில் நடைபெறும். விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளின் நினைவுப் பேருரைகளுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். [22]

## மாவீரர் நினைவாக சிறுவர் பாடசாலை

(வடமராட்சி)

லெப். தமிழேஸ்வரன் நினைவாக கரவெட்டி தல்லையம்புலம் ஸ்ரீ வீரபத்திர பத்திரகாளி அம்மன் ஆலய அருகில் இன்று திங்கட்கிழமை மாலை 3. 30 மணியளவில் கலைமகள் சனசமூக நிலையத் தலைவர் திரு சி. பேரின்பநாதன் தலைமையில் சிறுவர் பாடசாலை ஒன்று திறந்து வைக்கப்பட உள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.

## மாகாண முதலமைச்சர்களை நியமிப்பதில் சங்கடம்

(கொழும்பு)

கலைக்கப்பட்ட மாகாண சபைகளின் சில முதலமைச்சர்கள் மீண்டும் முதலமைச்சர்களாவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி மேலிடம் விரும்பவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் லலித் அத்துலத்முதலியின் ஜனநாயக ஐக்கியதேசியக் கட்சியுடன் தொடர்புகொண்டிருந்தனர் என்பதனாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இவர்களை தற்பொழுது பகைத்துக்கொண்டால் இவர்கள் ஜனநாயக ஐக்கியதேசியக் கட்சியுடன் இணைந்துவிடலாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் மேலிடம் அஞ்சுகிறது. இதனால் இம்முறை மாகாணசபை தேர்தலுக்கு கட்சியின் வேட்பாளர் பட்டியலில் அதிகூடிய வாக்குப் பெறுபவரையே முதலமைச்சராக நியமிப்பது எனவும் முன்னதாக முதலமைச்சரின் பெயரை அறிவிப்பதில்லை என கட்சி மேலிடம் முடிவு செய்துள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை ஏழு மாகாண சபைகளிலும் ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக்கட்சி தலைமையிலான 10 கட்சிக் கூட்டணி, ஜனநாயக ஐக்கிய தேசிய கட்சி என்பன போட்டியிடவுள்ளன.

இதேவேளை அங்கீகாரம் பெற்ற 32 கட்சிகள் இருந்தும் 10 கட்சிகள் மட்டுமே தேர்தலில் போட்டியிடவுள்ளதாக. தெரியவருகிறது

### சுற்றுலா

பிறகு, இந்தக் காரியத்தில் பங்கெடுக்குமாறு நோர்வே மற்றும் டென்மார்க்கிடம் உத்தியோகபூர்வமாக இந்த இயக்கம் ஒப்படைக்கபடவுள்ளது.

சுவீடன் நாட்டுக் குழந்தைதைகள் பாதுகாப்பு அமைப்பின் உதவியுடன் பாங்கொங்கை மையமாகக் கொண்டு செயற்படும் ஆசிய சுற்றுலாத் துறையில் குழந்தைகள் விபச்சாரத்தை ஒழிக்கும் அமைப்பு முதலில் கடந்த மார்ச் மாதத்தில் இந்த இயக்கத்தை ஆரம்பித்தது. தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், சிறிலங்கா ஆகிய நாடுகளில் குழந்தைகளைக் கெடுதலில் இருந்து காப்பாற்றும் துண்டுப்பிரசுரங்களை மேற்படி அமைப்பு பிரயாண முகவர் நிலையங்களுக்கு அனுப்பிவைத்துள்ளது'

பாங்கொக்கில் வெளியிடப்பட்ட புள்ளிவிபரங்களின்படி சிறிலங்காவில் குறைந்தது 25.000 க்கும், 50,000 இடைப்பட்ட குழந்தைகள் விபச்சாரத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது குழந்தைகளை விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் இந்தப் பாலியல் வியாபாரத்தில் சிலநேர்மையற்ற அரச அதிகாரிகளும், கறுப்புச் சந்தைக் காரர்களும் சம்பந்தப்பட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

சிறிலங்கா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்துக்குச் சுற்றுலாப் பயணிகள் செல்வதைத் தடை செய்யும் சுவீடன் நாட்டு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சுற்றுலாப் பயணிகள் இந்நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு எதிராக 40.000 கையெழுத்துக்களைச் சேகரித்துள்ளனர்.

குழந்தைகள் விபச்சாரத்தில் ஈடுபடுவதை நினைவு கூரும் தினமான மார்ச் 31ஆம் திகதியன்று இதுகுறித்து சுவீடன் ...

### நூறு

மற்றும் நான்கு நட்சத்திர ஜெனரல் ஒருவர். பதின்நான்கு மேஜர் ஜெனரல்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

### விமானப்

பொழுது பொருத்தும் வேலைகள் நடைபெறுவதோடு சிறிலங்கா விமானிகளுக்கும், பொறியியலாளர்களுக்கும் அவற்றில் பயிற்சி அளிக்கப்படுவதாகவும் தெரியவருகின்றது.

கடந்தவருடம் தரைப்போரில் பல தோல்விகளைச் சந்தித்த சிறிலங்கா இராணுவத்தில் இருந்து பல ஆயிரக்கணக்கானோர் தப்பி ஓடியுள்ளனர். இதேவேளை புதியவர்களை இராணுவத்தில் சேர்த்துக் கொள்ள அரசாங்கம் எடுத்த திட்டங்களும் தோல்வியில் முடிவுற்றுள்ளன.

இந்நிலையில்விமானப்படையைப் பலப்படுத்துவதன் மூலம் தரைப்படைக்கு ஒத்துழைப்பு வழங்கவும். உற்சாகமூட்டவும் அரசாங்கம் முயற்சித்து வருகின்றது. இதன் மூலம் தரைப்படைக்கு உயிரிழப்பைக் குறைக்கலாம் எனவும் அரசு கருதுகின்றது.

### அம்பாறையின் சில பகுதிகளை

## சிங்கள மாவட்டங்களுடன் இணைக்கத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளை சிங்கள மாவட்டங்களுடன் இணைக்க சிறிலங்கா அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளும் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் சென்றிருப்பதும், மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கும் களுவாஞ்சிக்குடி, பாலையடிவெட்டை, வெல்லாவெளி போன்ற தமிழ்க் இராமத்தின் சில பகுதிகள் அம்பாறை மாவட்டத்திலுள்ள இராணுவத்தின் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டிருப்பது தெரிந்ததே.

அத்துடன் அம் மாவட்டத்தில் சிங்களவர்களைக் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் துரிதகதியில் செயற்படுத்தப்படுகிறது எனவும் தெரியவருகிறது.

## மரண அறிவித்தல்கள்

### இராமுப்பிள்ளை பொன்னையா

[இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்]

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய இராமுப்பிள்ளை பொன்னையா (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்(28-03-93) ஞாயிற்றுக் கிழமை (நேற்று) சிவபதமடைந்து விட்டார்.

இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், அன்னை பூபதி, அருளானந்தம் (இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்), பாலசுப்பிரமணியம் (முன்னைநாள் நெற்சந்தைப்படுத்தும் களஞ்சியப் பொறுப்பாளர் தற்பொழுது கனடா), நடராஜா (நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க களஞ்சியப் பொறுப்பாளர்), மகேஸ்வரி (கனடா). பாலகிருஷ்ணன் (ஜேர்மனி), யோகரத்தினம் (யோக, பிரான்ஸ்). ஜெகநாதன், குகநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும்,

க. சுப்பிரமணியம் (இளைப்பாறிய சிறை அதிகாரி), நடராசா(கனடா) சுரேசபாலன்(பிரான்ஸ்) வில்லியன், காஞ்சனா, மல்லிகாதேவி, தேவாம்பிகை, ஞானேஸ்வரி ஆகியோரினதும். தனபாலசிங்கம் (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்) அவர்களினதும் அன்பு மாமனாரும்,

பத்மினி, நந்தினி, சாந்தினி. குமுதினி, மஞ்சுளா, நிர்மலா, அஜீத். இராகவன், தர்சினி. சர்மினி சபிதா, கவாஸ்கர், கீர்த்திகா, சிந்தூரி, கேசவன், ஆதவன், பைரவி, கரிசு, மைதிலி, மிதுலன் ஆகியோரின் அன்புப் பேரனும் கோபி, திவ்வியா, யசித்தா, நிருபா, ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கோண்டாவில் வடக்கு அவரது இல்லத்தில் 29-03-93 (இன்று) திங்கட்கிழமை நடைபெற்று தகனக் கிரியைக்காக கொட்டைக்காடு கோண்டாவில் வடக்கு மயானத்திற்கு பிற்பகல் 2மணியளவில் எடுத்துச் செல்லப்படும் இத்தகவலை உற்றார். உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

[4588] பொ. நடராஜா (மகன்)

### திருமதி அரியகுட்டி நாகம்மா

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த நாகம்மா 28-03-93 நேற்று சிவபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற சட்டநாதர் அரியகுட்டியின் அன்பு மனைவி ஆவார். அன்னா

காங்கிரஸ் கட்சி முடிவு

(டில்லி)

ஒருவருக்கு ஒரு பதவி என்ற கொள்கை கட்சித் தலைவருக்குப் பொருந்தாது என்று அனைத்து இந்திய இந்திரா காங்கிரஸ் கட்சியின் இரண்டு நாள் மாநாடு முடிவு செய்துள்ளது.

பி. வி. நரசிம்மராவ் தலைமைக்கு மாநாடு ஆதரவு தெரிவித்தது. ஒருவருக்கு ஒருபதவி என்ற கொள்கை கட்சித் தலைவருக்கும், பிரதம மந்திரிக்கும் பொருந்தாது என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அமைச்சர் அர்ஜுன் சிங் தலைமையிலான அதிருப்தியாளரின் 'ஒருவருக்கு ஒரு பதவி என்ற கோரிக்கை' தோல்வி கண்டது.

## ரஷ்ய அரசியல் கொந்தளிப்பு தணிவு


### -கருத்துக் கணிப்பு ஒத்திவைப்பு

இந்த வருடத்தின் நவம்பர் மாதத்தில் ரஷ்யாவில் அதிபர் தேர்தலையும், பாராளுமன்றத் தேர்தலையும் நடத்துவதென இணக்கம் காணப்பட்டிருப்பதாக ரஷ்ய பாராளுமன்ற சபாநாயகர் கஸ்புலட்டோவ் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இந்த மாதம் 25-ம் திகதிநடத்தப்பட இருந்த கருத்துக் கணிப்பு கைவிடப்பட்டுள்ளது. ரஷ்ய அதிபர் பொறிஸ்யெல்ட்சினுக்கும் சபாநாயகர் கஸ்புலட்டோவிற்கும் இடையே இடம்பெற்ற நீண்ட நேரப் பேச்சுக்களையடுத்து இணக்கம் காணப்படுவதாகவும், அதையடுத்து தேர்தல் நடத்தும் முடிவு எடுக்கப்பட்டதாகவும் சபாநாயகர் கஸ்புலட்டோவ் தெரிவித்தார்.

---


## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி

### மேரி சரோஜினி கமலாகரன்

பிறப்பு: 07.07.1956 இறப்பு: 27.02.1993

திருமதி மேரி சரோஜினி கமலாகரன் 27-02-1993-ல் பிரான்சில் காலமானார். இவர் உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திரு. ஜே. ஜே. கமலாகரனின் அன்புமனைவியும், பேபியன் ரஜன்த். கரோலின். கெவின் ஆகியோரின் அன்புத்தாயாரும் திரு. திருமதி சவரிமுத்து தம்பதிகளின் ஏகபுத்திரியும், காலஞ்சென்ற றோஜ் பிலமேந்திரா (யோகம்), ஜெராட் மாசிலாமணி (செல்வம்), அன்ரன் கிறைசிஸ் (எழுதுவினைஞர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை), ஜோசெப் நிக்கிலஸ் (மதுரம்) [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

இவரது ஆத்மசாந்திக்காக 29-03-93 திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு மிருசுவில் புனித சன்னிக்கிலார் ஆலயத்தில் திருப்பலிப்பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

தகவல்:

உசன், மிருசுவில். திரு. நீ. ச. இரத்தினராசா (4586)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம், இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம்ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


---

...மறுதினம் புதன்கிழமை இரவு நாவற்குழி லவனிதா குடியிருப்பில் நடைபெறும். விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளின் நினைவுப் பேருரைகளுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். [22]

## மாவீரர் நினைவாக சிறுவர் பாடசாலை

(வடமராட்சி)

லெப். தமிழேஸ்வரன் நினைவாக கரவெட்டி தல்லையம்புலம் ஸ்ரீ வீரபத்திர பத்திரகாளி அம்மன் ஆலய அருகில் இன்று திங்கட்கிழமை மாலை 3. 30 மணியளவில் கலைமகள் சனசமூக நிலையத் தலைவர் திரு சி. பேரின்பநாதன் தலைமையில் சிறுவர் பாடசாலை ஒன்று திறந்து வைக்கப்பட உள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலாவும் கௌரவ விருந்தினராக கரவெட்டி பிதேச செயலர் திரு. எஸ். ஸ்ரீநிவாசன் அவர்களும், விடுதலைப் புலிகள் பிரமுகர்களும் மற்றும் பலரும் கலந்துகொள்வர். [யோ]

## செஞ்சிலுவை கிளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி ரயர் தொழிற்சாலை அகதிகள் முகாமில் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளை திறப்பு விழா இன்று நடைபெறவுள்ளது.

இதில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரி செல்வி யூறி, சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் மற்றும் செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரிகள் கலந்து கொள்வார்கள்.

---

### பூசா

காப்பு அமைச்சின் செயலாளர் ஜயலத் கமிசன், எதிர்க்கட்சிகள் என்பவற்றிற்கும் தமது தற்போதைய நிலைகுறித்து அறிவித்ததாகவும், பயன் ஏதும் அற்ற நிலையிலேயே தாம் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாகவும் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

---

### எத்தனை

தான். தாய் மொழியை நேசித்ததால் தான் தமிழ் மொழியில் கல்வி பயின்றான். தாயை நேசித்ததால் தான் தாயைப் பார்க்கச்சென்றான் என்றார்.

இவரைத்தொடர்ந்து பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுகையில் கிளாலிக் கடல் தற்போது செங்கடலாக மாறி வருகின்றது இதனை நாம் ஒன்றிணைந்தால் மட்டுமே தடுக்கமுடியும் என்றார். (நி)

---

அவற்றில் பயிற்சி அளிக்கப்படுவதாகவும் தெரியவருகின்றது.

கடந்தவருடம் தரைப்போரில் பல தோல்விகளைச் சந்தித்த சிறிலங்கா இராணுவத்தில் இருந்து பல ஆயிரக்கணக்கானோர் தப்பி ஓடியுள்ளனர். இதேவேளை புதியவர்களை இராணுவத்தில் சேர்த்துக் கொள்ள அரசாங்கம் எடுத்த திட்டங்களும் தோல்வியில் முடிவுற்றுள்ளன.

இந்நிலையில்விமானப்படையைப் பலப்படுத்துவதன் மூலம் தரைப்படைக்கு ஒத்துழைப்பு வழங்கவும். உற்சாகமூட்டவும் அரசாங்கம் முயற்சித்து வருகின்றது. இதன் மூலம் தரைப்படைக்கு உயிரிழப்பைக் குறைக்கலாம் எனவும் அரசு கருதுகின்றது.

சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டத்தின்படி இவ்வருடத்தின் மத்தியில் விமானப்படைக்குரிய விமானங்கள் யாவும் வந்து சேர்ந்துவிடும் எனவும் பயிற்சிகள் முற்றுப் பெற்றுவிடும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதன் பின்னர்வடக்கில் இராணுவ தாக்குதல்கள் தீவிரமாகலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

---

ரத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது குழந்தைகளை விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் இந்தப் பாலியல் வியாபாரத்தில் சிலநேர்மையற்ற அரச அதிகாரிகளும், கறுப்புச் சந்தைக் காரர்களும் சம்பந்தப்பட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

சிறிலங்கா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்துக்குச் சுற்றுலாப் பயணிகள் செல்வதைத் தடை செய்யும் சுவீடன் நாட்டு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சுற்றுலாப் பயணிகள் இந்நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு எதிராக 40,000 கையெழுத்துக்களைச் சேகரித்துள்ளனர்.

குழந்தைகள் விபச்சாரத்தில் ஈடுபடுவதை நினைவு கூரும் தினமான மார்ச் 31ஆம் திகதியன்று இதுகுறித்து சுவீடன் பிரகடனம் ஒன்றையும் வெளியிடவுள்ளது.

---

### விளான்

க்குத் திரும்பிச் சென்றது.

இத் தாக்குதலின் போது இராணுவத் தரப்பில் பலர் படுகாயமடைந்ததாக தெரியவருகிறது புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது

---




மாணவர்களின் ஆக்கமுயற்சிகளை ஊக்குவிப்பதற்கு ஈழநாதம் விரும்புகிறது. வெள்ளி மஞ்சரியில் தொடர்ந்து மாணவர்களுக்கான பகுதிவெளிவரவுள்ளது. மாணவர்களிடமிருந்து கவிதை, கதை போன்ற சுய ஆக்க முயற்சிகளையும் சமூக மற்றும் அறிவியல் கட்டுரைகளையும் எதிர்பார்க்கிறோம், ஆக்கங்கள் இருநூற்றிஐம்பது சொற்களுக்கு மேற்படாமல் இருப்பது விரும்பத்தக்கது, (ஆ-ர்)

---


ஸ்ரீதர் திரையரங்கில்...

"தமிழோசை"

தினசரி மாலை

4 மணிக்கும் 6 மணிக்கும்

காண்பிக்கப்படுகிறது

(இ/6149)


---


...கவாஸ்கர், கீர்த்திகா, சிந்தூரி, கேசவன், ஆதவன், பைரவி, கரிசு, மைதிலி, மிதுலன் ஆகியோரின் அன்புப் பேரனும் கோபி, திவ்வியா, யசித்தா, நிருபா, ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கோண்டாவில் வடக்கு அவரது இல்லத்தில் 29-03-93 (இன்று) திங்கட்கிழமை நடைபெற்று தகனக் கிரியைக்காக கொட்டைக்காடு கோண்டாவில் வடக்கு மயானத்திற்கு பிற்பகல் 2மணியளவில் எடுத்துச் செல்லப்படும் இத்தகவலை உற்றார். உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

[4588] பொ. நடராஜா (மகன்)

---

### திருமதி அரியகுட்டி நாகம்மா

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த நாகம்மா 28-03-93 நேற்று சிவபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற சட்டநாதர் அரியகுட்டியின் அன்பு மனைவி ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்றுதிங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல் :
பிள்ளைகள்

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (4588)

---

### பொன்னையா பாலகணேசமூர்த்தி

(சாரதி - கிளிநொச்சி அரசசெயலகம்)

முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கிளிநொச்சி வட்டக்கச்சியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய பொன்னையா பாலகணேசமூர்த்தி கொழும்பில் 27 - 03 - 93இல் அகால மரணமானார். அன்னார் பொன்னையா குழந்தைநாச்சி ஆகியோரின் அன்பு மகனும் இந்திரகுமாரி (2 ஆம் வருட கலைப்பீட மாணவி யாழ். வளாகம்) அவர்களின் அன்புக்கணவரும் தர்சன், தனுஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணை [முள்ளியவளை], அவர்களின்அன்புச் சகோதரரும் ஆவார், அன்னாரது ஈமக் கிரியைகள் இன்று 29-03-93மாலை 3.00 மணியளவில் வட்டக்கச்சி மம்மில் மயானத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல் :

(4585) கி. விஜயன்

---

### கண்ணீர் அஞ்சலி

பாலகணேசமூர்த்தி

[சாரதி, கிளிநொச்சி செயலகம்]



யாழ். பல்கலைக்கழக 2 ஆம் வருட மாணவி இந்திரகுமாரியின் அன்புக் கணவரின் அகால மரணத்தையிட்டு அன்னாருக்கும் அவரது குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யாழ். பல்கலைக்கழக
கிளிநொச்சி மவட்ட
மாணவர் ஒன்றியம்.

[4584]